மூ.மு.அ1/1034/2024

நாள் : 30.08.2024

கோட்டாட்சியர் அலுவலகம்,

தென்காசி.

தடையின்மைச்சான்று

தென்காசி மாவட்டம், தென்காசி வட்டம், தென்காசி கிராமம், 227சி -1ஏ, தைக்கா தெரு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. அய்யப்பன் த.பெ. மொட்டையன் என்பவர் தென்காசி வட்டம், தென்காசி கிராமம் வார்டு -ஏ, பிளாக் -6. நகரளவை எண்கள் 37,38,40,41 ஆகிய புலங்களை மனுதாரர் ஆவண எண்.2201-2021-இன்படி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார். மேற்படி நிலத்திலிருந்து தென்காசி வட்டம், வார்டு -ஏ, பிளாக் -6, நகரளவை எண் 4-2-ல் ஆணையாளர் நகராட்சி பெயரில் உள்ள சாலைக்கு இடையில் தென்காசி நகரம் வார்டு-ஏ. பிளாக்-6, நகரளவை எண்.16-இல் (பழைய புல எண்.397-2) சர்க்கார் புறம்போக்கு வாய்க்கால் உள்ளது. மேற்கண்ட வாய்க்கால் (வார்டு -பி, பிளாக்-5, நகரளவை எண்.10, பரப்பு 6.01.74 ஹெக்டேர் கீழ்புறம் உள்ள குளம்) செல்கிறது. மனுதாரர் தனது புலத்திற்குச் செல்வதற்கு மேற்படி வாய்க்கால் ஓடையில் பாலம் அமைப்பதற்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறும் வகைக்கு தடையில்லாச் சான்று கோரியது தொடர்பாக மேற்படி தென்காசி கிராமம், வார்டு -ஏ, பிளாக் -6. நகரளவை எண்கள் 37,38,40,41 சென்றுவர ஏதுவாக தென்காசி நகரம் வார்டு-ஏ. பிளாக் - 6, நகரளவை எண்.16-இல் (பழைய புல எண்.397-2) சர்க்கார் புறம்போக்கு வாய்க்கால் மேல் பாலம் அமைக்கத் தடையில்லாச்சான்று வழங்கலாம் என தென்காசி வருவாய் வட்டாட்சியர் பரிந்துரை செய்துள்ளார். எனவே, வருவாய் வட்டாட்சியரின் பரிந்துறை மற்றும் ஆவணங்களின் அடிப்படையிலும் தடையில்லாச்சான்று வழங்கப் பரிந்துரை செய்கிறேன்.

இச்சான்று நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெறும் வகைக்காக மட்டும் வழங்கப்படுகிறது.

30/8/24.

கோட்டாட்சித்தலைவர்,

தென்காசி.

பெறுநர் :

திரு. அய்யப்பன்

த.பெ. மொட்டையன்

227சி -1ஏ, தைக்கா தெரு,

தென்காசி கிராமம்,

தென்காசி வட்டம்,

தென்காசி மாவட்டம்.

30/8/24